ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1861/43 - 2014 මැයි මස 09 වැනි සිකුරාදා - 2014.05.09

*1861/43 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான முன்னைய அமைச்சரின் பரிந்துரையின் பேரில் இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது அநுராதபுர அபிவிருத்தி செயல்திட்டத்தின் கீழ் பிரேரிக்கப்பட்ட கலப்பு அபிவிருத்தியை அபிவிருத்தி செய்ய உடனடியாக தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஷ மாவத்த,
கொழும்பு 03 ,
2014, மே 07.

**அட்டவணை**

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவு, கிராம சேவகர் பிரிவு இல. 574 கூளன்குளம் கிராமத்தில் அமைந்துள்ளதும், 1982.09.30 ஆந் திகதியிடப்பட்டு காணி அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம மாதிரிப்பட (இ. கி. மா. FVP) இல. 248 இல் குறிப்பிடப்பிட்ட காணித்துண்டு இல. 40 ஆனது 20.327 ஹெக். (50ஏ. 00றூ. 34.24 பேர்ச்.) விஸ்தீரணத்தைக் கொண்டு பின்வருமாறு சூழப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : இ. கி. மா. இல. 248 இனது காணித்துண்டு இல. 41 ;
கிழக்கு : இ. கி. மா. இல. 248 இனது காணித்துண்டு இல. 41 ;
தெற்கு : ஈச்சம்குளம் இ. கி. மா. இல. 255 மற்றும் இ. கி. மா. இல. 248 இனது காணித்துண்டு இல. 41 ;
மேற்கு : இ. கி. மா. இல. 248 இனது காணித்துண்டு இல. 41.

5- 750



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.